**40.** $20\ W/cm^2$ எனும் சராசரி பாய அடர்த்தி கொண்ட ஒளி, $20\ cm^2$ பரப்பளவு உடைய எதிரொளிப் பற்ற பரப்பின் மீது செங்குத்து வீழலில் விழுகிறது. 1 நிமிட கால இடைவெளியில், பரப்பால் ஏற்கப்பட்ட ஆற்றல் என்பது :

(1) $48 \times 10^3$ J
(2) $10 \times 10^3$ J
(3) $12 \times 10^3$ J
(4) $24 \times 10^3$ J

**41.** ஓர் இடைமுகத்திம் ப்ரூஸ்டர் கோணம், $i_b$ அமையவேண்டிய மதிப்பு :

(1) $i_b = 90°$
(2) $0° < i_b < 30°$
(3) $30° < i_b < 45°$
(4) $45° < i_b < 90°$

find my college



**42.** 50 cm நீளமும், 100 சுற்றுகளையும் உடையதொரு நீள்வரிச்சுருள், 2.5 A மின்னோட்டத்தினை தாங்கிச் செல்கிறது. நீள் வரிச்சுருளின் மையத்தில் உள்ள காந்தப்புலம் என்பது : $(\mu_0 = 4\pi \times 10^{-7}\ \text{T m A}^{-1})$

(1) $3.14 \times 10^{-5}$ T
(2) $6.28 \times 10^{-4}$ T
(3) $3.14 \times 10^{-4}$ T
(4) $6.28 \times 10^{-5}$ T

**43.** ஒரு தொடர் LCR மின்சுற்று, ஓர் ac மின்னழுத்த மூலத்தோடு இணைக்கப் பட்டுள்ளது. மின்சுற்றிலிருந்து, L விலக்கப்படும் போது, மின்னோட்டம் மற்றும் மின்னழுத்தத்திற்கிடையிலான கட்டவேறுபாடு, $\frac{\pi}{3}$ ஆகும். இதற்கு பதிலாக, C மின்சுற்றிலிருந்து விலக்கப்படின், மின்னோட்டம் மற்றும் மின்னழுத்தத்திற்கிடையிலான கட்ட வேறுபாடு, மீண்டும் $\frac{\pi}{3}$ என்றமைகிறது. மின்சுற்றினது திறன் காரணி என்பது :

(1) $-1.0$
(2) சுழி
(3) 0.5
(4) 1.0

**44.** சீரிசை இயக்கத்திலுள்ள துகள் ஒன்றின் இடப்பெயர்ச்சி மற்றும் முடுக்கம் ஆகியவற்றிற்கிடையிலான கட்ட வேறுபாடு என்பது :

(1) சுழி
(2) $\pi$ rad
(3) $\frac{3\pi}{2}$ rad
(4) $\frac{\pi}{2}$ rad

**45.** $2\hat{k}$ m என்ற ஆர வெக்டர் கொண்ட துகள் ஒன்றின் மீது, மூலத்தைப் பொருத்த $3\hat{j}$ N என்றதொரு விசை செயல்படும் போதுள்ள திருப்புவிசையைக் காண்க.

(1) $6\hat{k}$ N m
(2) $6\hat{i}$ N m
(3) $6\hat{j}$ N m
(4) $-6\hat{i}$ N m

**46.** உர்ட்ஸ் வினையில் கீழ்கண்ட எந்த ஆல்கேன்-ஐ பெருமளவில் தயாரிக்க இயலாது ?

(1) n-ப்யூட்டேன்
(2) n-ஹெக்சேன்
(3) 2,3-டைமெத்தில் ப்யூட்டேன்
(4) n-ஹெப்டேன்

**47.** கீழ்கண்ட வினையில் கார்பனின் ஆக்சிஜனேற்ற எண்ணில் ஏற்படும் மாற்றம் என்ன ?

$CH_4(g) + 4Cl_2(g) \rightarrow CCl_4(l) + 4HCl(g)$

(1) 0 இல் இருந்து $-4$
(2) $+4$ இல் இருந்து $+4$
(3) 0 இல் இருந்து $+4$
(4) $-4$ இல் இருந்து $+4$

**48.** ஒரு ஆல்கீன் ஓசசோனேற்றத்தின் போது மெத்தனல் -ஐ ஒரு விளை பொருளாகத் தருகின்றது. அதன் அமைப்பானது :

(1)



(2)



(3)



(4)


find my college



**49.** யூரியா நீருடன் வினைபுரிந்து **A** -வை தருகின்றது, அது சிதைவடைந்து **B** -யை தரும். **B** -யை ஆழ்ந்த நீலம் நிறமுடைய $Cu^{2+}$ (aq) கரைசலினுள் செலுத்தும் போது **C** -யை தருகின்றது. கீழ்கண்டவற்றுள் **C**-யின் வாய்பாடு என்ன ?

(1) $CuCO_3 \cdot Cu(OH)_2$

(2) $CuSO_4$

(3) $[Cu(NH_3)_4]^{2+}$

(4) $Cu(OH)_2$

**50.** சரியாக **பொருந்தாதவற்றை** கண்டறியவும்.

| | **பெயர்** | | **IUPAC அதிகார-பூர்வமான பெயர்** |
|---|---|---|---|
| (a) | Unnilunium | (i) | மெண்டலீவியம் |
| (b) | Unniltrium | (ii) | லாரான்சியம் |
| (c) | Unnilhexium | (iii) | ஸீபோர்ஜியம் |
| (d) | Unununnium | (iv) | டார்ம்ஸ்டாட்-டியம் |

(1) (d), (iv)

(2) (a), (i)

(3) (b), (ii)

(4) (c), (iii)

**51.** 2-புரோமோ பென்டேன் நீக்கவினையில் ஈடுபட்டு பென்ட்-2-ஈன் உருவாகும் போது நிகழும் வினை எது ?

(a) β-நீக்க வினை

(b) செயிட்செவ் விதியை பின்பற்றுகிறது

(c) ஹைட்ரஜன் ஹாலஜன் நீக்கவினை

(d) நீர் நீக்க வினை

(1) (a), (b), (d)

(2) (a), (b), (c)

(3) (a), (c), (d)

(4) (b), (c), (d)

**52.** கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று அதிகபட்ச எண்ணிக்கையிலான அணுக்களை கொண்டுள்ளது ?

(1) 1 g Li(s) [Li -யின் அணுநிறை = 7]

(2) 1 g Ag(s) [Ag -யின் அணுநிறை = 108]

(3) 1 g Mg(s) [Mg -யின் அணுநிறை = 24]

(4) 1 g $O_2$(g) [O -யின் அணுநிறை = 16]

**53.** கீழ்கண்டவற்றுள் **சரியான** கூற்றை தேர்ந்தெடுக்கவும்.

(1) தேனிரும்பு பல்வேறு அமைப்புகளாக வார்ப்பு செய்யப்படுகிறது.

(2) 4% கார்பன் உடைய மெல்லிரும்பு தூய்மையற்றது.

(3) $CO_2$ வெளிவருவதால் கொப்பளக் காப்பரானது கொப்பளத்தேற்றத்தை கொண்டுள்ளது.

(4) வான் -ஆர்க்கல் முறையில் நிக்கல் ஆவி அழுத்த தூய்மையாக்கல் செய்யப் படுகிறது.

**54.** ஒரு மூவிணைய பியூடைல் கார்பன் நேர் அயனி, ஒரு ஈரிணைய பியூடைல் கார்பன் நேர் அயனியைவிட அதிக நிலைப்புத்தன்மையை கொண்டிருப்பதற்கு கீழ்கண்டவற்றுள் எது, காரணமாகிறது ?

(1) பிணைப்பில்லா உடனிசைவு/குறை பிணைப்பு

(2) $-CH_3$ தொகுதிகளின் $-I$ விளைவு

(3) $-CH_3$ தொகுதிகளின் $+R$ விளைவு

(4) $-CH_3$ தொகுதிகளின் $-R$ விளைவு

**55.** அனிசோலை, HI உடன் பிளத்தல் வினைக்கு உட்படுத்தும் போது கிடைப்பது :

(1)  $+ C_2H_5OH$

(2)  $+ CH_3I$

(3)  $+ CH_3OH$

(4)  $+ C_2H_5I$

find my college



**56.** ஒரு சிலின்டரில் $N_2$ மற்றும் Ar வாயுக்கள் கொண்ட ஒரு கலவை உள்ளது. அதில் 7 g $N_2$ மற்றும் 8 g Ar உள்ளது. சிலின்டரில் உள்ள வாயு கலவையின் மொத்த அழுத்தம் 27 bar எனில், $N_2$ -வின் பகுதி அழுத்தம் :
[N = 14, Ar = 40 (g $mol^{-1}$ -ல்) : அணுநிறைகளை பயன்படுத்துக]
(1) 18 bar
(2) 9 bar
(3) 12 bar
(4) 15 bar

**57.** கீழ்கண்ட மூலக்கூறுகளின் தொகுப்பில் எது பூஜ்ய இருமுனை திருப்புத்திறனை கொண்டுள்ளது ?
(1) போரான் ட்ரை புளூரைடு, பெரிலியம் டை புளூரைடு, கார்பன் டை ஆக்சைடு, 1,4-டை குளோரோ பென்சீன்
(2) அம்மோனியா, பெரிலியம்டை புளூரைடு, நீர், 1,4-டை குளோரோ பென்சீன்
(3) போரான் ட்ரை புளூரைடு, ஹைட்ரஜன் புளூரைடு, கார்பன் டை ஆக்சைடு, 1,3-டை குளோரோ பென்சீன்
(4) நைட்ரஜன் ட்ரை புளூரைடு, பெரிலியம் டை புளூரைடு, நீர், 1,3-டை குளோரோ பென்சீன்

**58.** கீழ்கண்டவற்றை பொருத்துக.

| | **ஆக்சைடு** | | **தன்மை** |
|---|---|---|---|
| (a) | CO | (i) | கார |
| (b) | BaO | (ii) | நடுநிலை |
| (c) | $Al_2O_3$ | (iii) | அமில |
| (d) | $Cl_2O_7$ | (iv) | ஈரியல்புள்ள |

கீழ்கண்டவற்றுள் **சரியான** விடை எது ?

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (i) | (ii) | (iii) | (iv) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

**59.** ஒரு முதல் வகை வினையின் வினைவேக மாறிலி $4.606 \times 10^{-3}\ s^{-1}$ ஆகும். 2.0 g வினைபடு பொருள் 0.2 g ஆக குறைவதற்கு தேவைப் படும் நேரம் :
(1) 1000 s
(2) 100 s
(3) 200 s
(4) 500 s

**60.** கீழ்கண்ட அமீனில் எவை கார்பலமைன் சோதனையை தருகின்றது ?

(1) 

(2) 

(3) 

(4) 

**61.** கூழ்ம கரைசலின் எந்த பண்பினை நிர்ணயிப்பதற்கு ஜீட்டாதிறன் அளவீடு பயன் படுகின்றது ?
(1) கூழ்மத்துகள்களின் உருவ அளவு
(2) பாகுத் தன்மை
(3) கரைதிறன்
(4) கூழ்மத்துகள்களின் நிலைப்புத்தன்மை

**62.** ஒரு வினையின் வினைபடு பொருள்களின் செறிவு அதிகரிப்பதனால் கீழ்கண்ட எது மாறுபடும் ?
(1) மோதல் அதிர்வெண்
(2) கிளர்வுகொள் ஆற்றல்
(3) வினை வெப்பம்
(4) பயன் தொடக்க ஆற்றல்/குறைந்த பட்ச இயக்க ஆற்றல்

find my college



63. கீழ்கண்ட எந்த உலோக அயனி பல நொதிகளை தூண்டி குளுகோசின் ஆக்ஸிஜனேற்றத்தில் பங்கேற்று, ATP -யை உற்பத்தி செய்து மற்றும் Na -வுடன் நரம்பு சைகை பரிமாற்றத்திற்கு காரணமாக அமைகிறது ?

(1) பொட்டாசியம்

(2) இரும்பு

(3) காப்பர்

(4) கால்சியம்

64. பிளாட்டினம் (Pt) மின் முனையை பயன்படுத்தி நீர்த்த சல்பூரிக் அமிலத்தை மின்னாற்ற பகுக்கும் போது, நேர்மின்முனையில் கிடைக்கும் விளைபொருள் :

(1) $SO_2$ வாயு

(2) ஹைட்ரஜன் வாயு

(3) ஆக்ஸிஜன் வாயு

(4) $H_2S$ வாயு

65. கீழ்கண்டவற்றில் எந்த ஒன்று கார அமினோ அமிலம் ஆகும் ?

(1) லைசின்

(2) சிரைன்

(3) அலனைன்

(4) டைரோசின்

66. நீர்த்த NaOH முன்னிலையில் பென்சால்-டிஹைடு மற்றும் அசிட்டோபீனோன் இடையிலான வினை எவ்வாறு அழைக் கப்படுகின்றது ?

(1) குறுக்க ஆல்டால் குறுக்கம்

(2) ஆல்டால் குறுக்கம்

(3) கானிசரோ வினை

(4) குறுக்க கானிசரோ வினை

67. $Cr^{2+}$ அயனியின் கணக்கிடப்பட்ட சுழற்சி காந்ததிருப்புத்திறனானது :

(1) 2.84 BM

(2) 3.87 BM

(3) 4.90 BM

(4) 5.92 BM

68. சுக்ரோசின் நீராற்பகுத்தல், கீழ்கண்ட வினையில் கொடுக்கப்பட்டுள்ளது.

சுக்ரோஸ் + $H_2O \rightleftharpoons$ குளுகோஸ் + ப்ரக்டோஸ்

300 K -இல் சமநிலை மாறிலியானது $(K_c)$ $2 \times 10^{13}$ எனில், அதே வெப்பநிலையில் $\Delta_r G^{\ominus}$ மதிப்பானது :

(1) $-8.314\ J\ mol^{-1}K^{-1} \times 300\ K \times \ln(4 \times 10^{13})$

(2) $-8.314\ J\ mol^{-1}K^{-1} \times 300\ K \times \ln(2 \times 10^{13})$

(3) $8.314\ J\ mol^{-1}K^{-1} \times 300\ K \times \ln(2 \times 10^{13})$

(4) $8.314\ J\ mol^{-1}K^{-1} \times 300\ K \times \ln(3 \times 10^{13})$

69. ரௌலட் விதியிலிருந்து நேர்விலக்கம் காண்பிக்கும் கலவையானது :

(1) குளோரோ ஈத்தேன் + புரோமோ ஈத்தேன்

(2) எத்தனால் + அசிட்டோன்

(3) பென்சீன் + டொலுவீன்

(4) அசிட்டோன் + குளோரோபார்ம்

70. சுக்ரோஸை நீரால் பகுத்தால் கிடைப்பது :

(1) $\alpha$-D-ப்ரக்டோஸ் + $\beta$-D-ப்ரக்டோஸ்

(2) $\beta$-D-குளுகோஸ் + $\alpha$-D-ப்ரக்டோஸ்

(3) $\alpha$-D-குளுகோஸ் + $\beta$-D-குளுகோஸ்

(4) $\alpha$-D-குளுகோஸ் + $\beta$-D-ப்ரக்டோஸ்

71. தாள்/காகித வண்ணப்பிரிகை எதற்கான எடுத்துக்காட்டு ?

(1) பத்தி வண்ணப் பிரிகை

(2) பரப்புக் கவர்ச்சி வண்ணப் பிரிகை

(3) பங்கீடு வண்ணப் பிரிகை

(4) மெல்லிய அடுக்கு வண்ணப் பிரிகை

72. அணைவுச் சேர்மங்கள் உருவாவதில் ஈனிகளின் புல வலிமையின் **சரியான** ஏறு வரிசை கீழ்கண்டவற்றில் எது ?

(1) $CN^- < C_2O_4^{2-} < SCN^- < F^-$

(2) $SCN^- < F^- < C_2O_4^{2-} < CN^-$

(3) $SCN^- < F^- < CN^- < C_2O_4^{2-}$

(4) $F^- < SCN^- < C_2O_4^{2-} < CN^-$

73. வெப்பம் மாறா நிபந்தனையின் கீழ், ஒரு நல்லியல்பு வாயு வெற்றிட விரிவாக்கம் அடைவதற்குரிய சரியான தெரிவானது :

(1) $q > 0$, $\Delta T > 0$ மற்றும் $w > 0$

(2) $q = 0$, $\Delta T = 0$ மற்றும் $w = 0$

(3) $q = 0$, $\Delta T < 0$ மற்றும் $w > 0$

(4) $q < 0$, $\Delta T = 0$ மற்றும் $w = 0$

find my college



**74.** $2Cl(g) \rightarrow Cl_2(g)$ வினையில், **சரியான** விடையானது :

(1) $\Delta_rH < 0$ மற்றும் $\Delta_rS < 0$

(2) $\Delta_rH > 0$ மற்றும் $\Delta_rS > 0$

(3) $\Delta_rH > 0$ மற்றும் $\Delta_rS < 0$

(4) $\Delta_rH < 0$ மற்றும் $\Delta_rS > 0$

**75.** அசிட்டோன் மற்றும் மெத்தில் மெக்னீசியம் ஆகியவை வினைபுரிந்து பின் அதன் தொடர்ச்சியாக நீராற்பகுத்தால் கிடைக்கும் விளைபொருள் :

(1) ஐசோபியூட்டைல் ஆல்கஹால்

(2) ஐசோபுரப்பைல் ஆல்கஹால்

(3) ஈரிணைய் பியூட்டைல் ஆல்கஹால்

(4) மூவிணைய பியூட்டைல் ஆல்கஹால்

**76.** கீழ்கண்ட வினைத் தொடரில் உருவாகும் சேர்மம் X -யை கண்டறியவும்.




(1)



(2)



(3)



(4)



**77.** உருகிய $CaCl_2$ -வில் இருந்து 20 g கால்சியம் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் பாரடேக்களின் (F) எண்ணிக்கை :

(Ca -ன் அணு நிறை $= 40 \text{ g mol}^{-1}$)

(1) 4

(2) 1

(3) 2

(4) 3

**78.** கீழ்கண்டவற்றுள் நேர் அயனி அழுக்குநீக்கி எது ?

(1) சோடியம் டோடெக்கைல் பென்சீன் சல்போனேட்

(2) சோடியம் லாரைல் சல்பேட்

(3) சோடியம் ஸ்டீரேட்

(4) சீடைல்ட்ரைமெத்தில் அம்மோனியம் புரோமைடு

**79.** கீழ்கண்டவற்றுள் எந்த ஒன்று இயற்கை பலபடி?

(1) பாலி (ப்யூட்டாடையீன்-அக்ரைலோ-நைட்ரைல்)

(2) *சிஸ்* -1,4- பாலிஐசோபீரின்

(3) பாலி (ப்யூட்டாடையீன்-ஸ்டைரீன்)

(4) பாலி ப்யூட்டாடையீன்

**80.** கீழ்கண்ட சல்பரின் அமில ஆக்சைடுகளில் எவை $-O-O-$ பிணைப்பை கொண்டுள்ளது ?

(1) $H_2S_2O_7$, பைரோ சல்பூரிக் அமிலம்

(2) $H_2SO_3$, சல்பூரஸ் அமிலம்

(3) $H_2SO_4$, சல்பூரிக் அமிலம்

(4) $H_2S_2O_8$, பெர்ஆக்சோடை சல்பூரிக் அமிலம்

**81.** 0.1 M NaOH இல் $Ni(OH)_2$ -வின் கரைதிறனை கண்டறியவும். கொடுக்கப்பட்டுள்ள $Ni(OH)_2$ -வின் அயனிப் பெருக்கமானது $2 \times 10^{-15}$.

(1) $1 \times 10^8$ M

(2) $2 \times 10^{-13}$ M

(3) $2 \times 10^{-8}$ M

(4) $1 \times 10^{-13}$ M

**82.** எந்த ஒரு மூலக்கூறு உருவாகாது என்பதனை கண்டறியவும்.

(1) $O_2$

(2) $He_2$

(3) $Li_2$

(4) $C_2$

find my college



**83.** பென்சீனின் உறைநிலைத் தாழ்வு மாறிலியின் ($K_f$) மதிப்பு 5.12 K kg $mol^{-1}$. மின்பகுளி அல்லாத கரைபொருளை கொண்ட 0.078 m மோலாலிட்டி பென்சீன் கரைசலின் உறைநிலைத் தாழ்வு மாறிலி :

(இரண்டு தசம புள்ளி வரை முழுமையாக்கவும்)

(1) 0.60 K
(2) 0.20 K
(3) 0.80 K
(4) 0.40 K

**84.** $CaCl_2$, $MgCl_2$ மற்றும் NaCl கரைசலினுள் HCl செலுத்தப்படுகின்றது. கீழ்கண்டவற்றுள் எந்தசேர்மம்/களில் ஒன்று படிகமாகும் ?

(1) NaCl, $MgCl_2$ மற்றும் $CaCl_2$
(2) $MgCl_2$ மற்றும் $CaCl_2$ இரண்டுமே
(3) NaCl மட்டும்
(4) $MgCl_2$ மட்டும்

**85.** $^{175}_{71}Lu$ உள்ள புரோட்டான்கள், நியூட்ரான்கள் மற்றும் எலக்ட்ரான்களின் எண்ணிக்கை முறையே :

(1) 175, 104 மற்றும் 71
(2) 71, 104 மற்றும் 71
(3) 104, 71 மற்றும் 71
(4) 71, 71 மற்றும் 104

**86.** கீழ்கண்டவற்றில் கார்பன்மோனாக்சைடு குறித்து எது **சரியற்றது** ?

(1) முழுமையடையாத எரிதலினால் உற்பத்தியாகின்றது
(2) அது கார்பாக்ஸி ஹீமோகுளோபினை உருவாக்கும்
(3) அது இரத்தத்தில் ஆக்சிஜன் கடத்தும் திறனை குறைக்கின்றது.
(4) கார்பாக்ஸி ஹீமோகுளோபின் (ஹீமோகுளோபின் CO உடன் இணைந்த அமைப்பு) ஆக்ஸி ஹீமோகுளோபினைக் காட்டிலும் குறைந்த நிலைப்புத்தன்மை கொண்டது

**87.** கீழ்கண்டவற்றை பொருத்தி **சரியான** விடையை கண்டறியவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | $CO(g)+H_2(g)$ | (i) | $Mg(HCO_3)_2+Ca(HCO_3)_2$ |
| (b) | தற்காலிக கடின நீர் | (ii) | ஒரு எலக்ட்ரான் குறை ஹைட்ரைடு |
| (c) | $B_2H_6$ | (iii) | தொகுப்பு வாயு |
| (d) | $H_2O_2$ | (iv) | தளமற்ற அமைப்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (iii) | (ii) | (iv) |
| (2) | (iii) | (i) | (ii) | (iv) |
| (3) | (iii) | (ii) | (i) | (iv) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**88.** **சரியற்ற** கூற்றை கண்டறியவும்.

(1) $CrO_4^{2-}$ மற்றும் $Cr_2O_7^{2-}$ -இல் குரோமியத்தின் ஆக்ஸிஜனேற்ற நிலைகள் ஒத்ததாக இருக்காது.
(2) நீரில் $Fe^{2+}(d^6)$ -யை காட்டிலும் $Cr^{2+}(d^4)$ ஒரு வலிமை மிகு ஒடுக்கும் காரணியாகும்.
(3) இடைநிலை உலோகங்களும் மற்றும் அதன் சேர்மங்களும் பல்வேறு ஆக்ஸிஜனேற்ற நிலைகளை பெற்றிருக்கும் திறன் வாய்ந்ததாலும் மற்றும் அணைவுகளை உருவாக்குவதாலும் அவை சிறந்த் வினையூக்கி பண்பை பெற்றுள்ளன.
(4) உலோகங்களின் படிக கூட்டில் சிறு அணுக்களான H, C அல்லது N உள்ளிளுக்கப்பட்டு உருவாக்கப்படுவதே இடையூட்டுச் சேர்மங்களாகும்.

**89.** பொருள் மைய கனச்சதுர (bcc) அமைப்புடைய ஒரு தனிமத்தின் கூடுவிளிம்பின் மதிப்பு 288 pm எனில், அதன் அணு ஆரமானது :

(1) $\frac{4}{\sqrt{2}} \times 288$ pm
(2) $\frac{\sqrt{3}}{4} \times 288$ pm
(3) $\frac{\sqrt{2}}{4} \times 288$ pm
(4) $\frac{4}{\sqrt{3}} \times 288$ pm

find my college



**90.** கீழ்கண்டவற்றிலிருந்து **சரியான** கூற்றுகளை கண்டறியவும்.

(a) ஐஸ்கிரீம் மற்றும் உறைந்த உணவிற்கு $CO_2$(g) குளிரூட்டியாக பயன்படுகிறது.

(b) $C_{60}$ அமைப்பானது பன்னிரெண்டு ஆறு கார்பன் கொண்ட வளையத்தையும் மற்றும் இருபது ஐந்து கார்பன் கொண்ட வளையத்தையும் கொண்டது.

(c) ZSM-5, ஜீயோலைட்டின் ஒரு வகை, ஆல்கஹால்களை பெட்ரோலாக மாற்று-வதற்கு பயன்படுகிறது.

(d) CO நிறமற்ற மற்றும் மணமற்ற வாயுவாகும்.

(1) (c) மற்றும் (d) மட்டும்

(2) (a), (b) மற்றும் (c) மட்டும்

(3) (a) மற்றும் (c) மட்டும்

(4) (b) மற்றும் (c) மட்டும்

**91.** தாவரங்களில் இன்றியமையாத மூலங்கள் மற்றும் அவற்றின் செயல்கள் குறித்த கீழ்கண்டவற்றை பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இரும்பு | (i) | ஒளிசார் நீர் பகுப்பு |
| (b) | துத்தநாகம் | (ii) | மகரந்தத்துகள் முளைத்தல் |
| (c) | போரான் | (iii) | குளோரோபில் உயிர்ம வழி உருவாக்கத்தில் தேவைப் படுவது |
| (d) | மாங்கனீசு | (iv) | IAA உயிர்மவழி உருவாக்கம் |

**சரியான** விடையை தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**92.** கீழ்கண்டவற்றுள் ஓர் இனத் தொகையுடன் **தொடர்பில்லாதது** எது ?

(1) சிற்றினங்களின் உறவு முறை

(2) பால் விகிதம்

(3) பிறப்பு வீதம்

(4) இறப்பு வீதம்

**93.** கீழ்கண்ட எது காற்றற்ற சிலட்ஜ் டைஜஸ்டரில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிகழ்த்தப்படுகிறது ?

(1) செயல்படுத்தப்பட்ட சிலட்ஜ்

(2) முதல் நிலை சிலட்ஜ்

(3) மிதக்கும் டெப்ரிஸ்கள்

(4) முதல் நிலை சுத்திகரிப்புக்குப்பின் உள்ள கழிவுநீர்

**94.** அடி தண்டிலிருந்து தோன்றும் வேர்கள் :

(1) பக்கவாட்டு வேர்கள்

(2) சல்லி வேர்கள்

(3) முதல் நிலை வேர்கள்

(4) தூண் வேர்கள்

**95.** ஃபுளோரிடியன் தரசம் இதற்கு இணையான அமைப்பைக் கொண்டது.

(1) லாமினாரின் மற்றும் செல்லுலோஸ்

(2) தரசம் மற்றும் செல்லுலோஸ்

(3) அமைலோ பெக்டின் மற்றும் கிளை-கோஜன்

(4) மான்னிடால் மற்றும் ஆல்ஜின்

**96.** சினாப்டினிமல் தொகுப்பு எந்த நிலையில் கலைந்து கரையத் தொடங்குகிறது ?

(1) லெப்டோடீன்

(2) பாக்கிடீன்

(3) சைக்கோட்டீன்

(4) டிப்ளோட்டீன்

**97.** மனித செரிமான மண்டலம் குறித்த **சரியான** கூற்று எது ?

(1) குடல் வால் டியோடீனத்திலிருந்து தோன்றுகிறது

(2) இலியம் சிறு குடலில் திறக்கிறது

(3) உணவு பாதையின் உள் படலம் செரோசா என்பது

(4) இலியம் என்பது மிகுந்த சுருங்கிய பகுதி

**98.** புற்களின் இலை நுனியில் நீர் திரவ நிலையில் இரவிலும் அதிகாலையிலும் வடிவதற்கு காரணமான நிக்ழ்வு எது ?

(1) பிளாஸ்மா சிதைவு

(2) நீராவிப்போக்கு

(3) வேர் அழுத்தம்

(4) உள்ளீர்த்தல்

find my college



99. சூலின் உடலம் பியூனிகிளில் இணைந்து காணப்படும் பகுதி :

(1) சலாசா

(2) ஹைலம் (சூல் தழும்பு)

(3) சூல் துளை

(4) நியூசெல்லஸ் (சூல் திசு)

100. ஒரு எதிரிடைப் பண்புக் கூறு தவிர்த்து ஏனையவை ஒத்த எத்தனை ஜோடிப் பண்புகளை மெண்டல் தனித்த தூயவழி பட்டாணித் தாவர வகைகளில் தேர்ந்தெடுத்தார் ?

(1) 8

(2) 4

(3) 2

(4) 14

101. தொகுதி கார்டேட்டா பற்றிய **சரியான** கூற்றுகள் யாது ?

(a) வால் நாணிகளில் முதுகுநாண் தலை முதல் வால் வரை வாழ்காலம் முழுவதும் காணப்படும்.

(b) முதுகெலும்புகளில் முதுகு நாண் கருவளர்ச்சிக் காலத்தில் மட்டும் காணப்படும்.

(c) மைய நரம்புத் தொகுதி முதுகுபுறத்தில் உள்ளீடற்றி நரம்பினை கொண்டது.

(d) கார்டேட்டா மூன்று துணை தொகுதிகளாக பிரிக்கப்பட்டது; அரை நாணிகள், டூனிக்கேட்டா மற்றும் தலை நாணிகள்.

(1) (b) மற்றும் (c)

(2) (d) மற்றும் (c)

(3) (c) மற்றும் (a)

(4) (a) மற்றும் (b)

102. பயறுவகைத் தாவரங்களின் வேர் முண்டுகளில் நைட்ரோஜினேஸ் மூலமாக வினையூக்கப்பட்ட வேதி வினையின் விளைப் பொருள்(கள்) :

(1) அம்மோனியா மற்றும் ஹைட்ரஜன்

(2) அம்மோனியா மட்டும்

(3) நைட்ரேட் மட்டும்

(4) அம்மோனியா மற்றும் ஆக்ஸிஜன்

103. சிட்ரிக் அமில சுழற்சியின் ஒரு சுழலின் போது தளப் பொருள் பாஸ்பாரிகரணம் நடைபெறுவதன் எண்ணிக்கை :

(1) மூன்று

(2) பூஜ்ஜியம்

(3) ஒன்று

(4) இரண்டு

104. கீழ்கண்டவற்றுள் பூமியின் எப்பகுதிகளில் அதிக அளவில் சிற்றினப் பன்மயம் காணப் படுகிறது ?

(1) அமேசான் காடுகள்

(2) இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலை

(3) மடகாஸ்கர்

(4) இமய மலை

105. EcoRI கண்டறியும் பாலின்டுரோமிக் வரிசை எது ?

(1) 5' - GGATCC - 3'
3' - CCTAGG - 5'

(2) 5' - GAATTC - 3'
3' - CTTAAG - 5'

(3) 5' - GGAACC - 3'
3' - CCTTGG - 5'

(4) 5' - CTTAAG - 3'
3' - GAATTC - 5'

106. கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி - I** | | **தொகுதி - II** |
|---|---|---|---|
| (a) | மிதக்கும் விலா எலும்புகள் | (i) | இரண்டு மற்றும் ஏழாவது விலா எலும்புகளிடையில் அமைந்துள்ளது |
| (b) | ஆக்ரோமியான் | (ii) | ஹியூமரஸின் தலை பகுதி |
| (c) | ஸ்கேப்புலா | (iii) | கிளாவிக்கிள் |
| (d) | கிளீனாய்டு குழி | (iv) | ஸ்டெர்னத்தோடு இணைந்திராது |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (i) | (iii) | (ii) | (iv) |
| (4) | (iii) | (ii) | (iv) | (i) |

find my college



**107.** கொடுக்கப்பட்டுள்ள தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | தொகுதி - I | | தொகுதி - II |
|---|---|---|---|
| (a) | ஈசினோ-ஃபில்கள் | (i) | தடைகாப்பு துலங்கல் |
| (b) | பேசோஃபில்கள் | (ii) | செல் விழுங்குதல் |
| (c) | நியூட்ரோ-ஃபில்கள் | (iii) | ஹிஸ்டமினேஸ் அழிக்கும் நொதிகளை விடுவித்தல் |
| (d) | லிம்போ-சைட்டுகள் | (iv) | ஹிஸ்டமின் கொண்ட துகள்களை விடுவித்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iii) | (iv) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (i) | (ii) | (iv) | (iii) |

**108.** கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | தொகுதி – I | | தொகுதி – II |
|---|---|---|---|
| (a) | Bt பருத்தி | (i) | ஜீன் சிகிச்சை |
| (b) | அடினோசைன் டிஅமினேஸ் குறைபாடு | (ii) | செல் வகை தற்காப்பு |
| (c) | ஆர்.என்.ஏ. இடையீடு | (iii) | ஹெச் ஐ வி தொற்றை கண்டறிதல் |
| (d) | பி.சி.ஆர். | (iv) | *பேசில்லஸ் துரின் ஜியன்சிஸ்* |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iii) | (iv) |
| (2) | (iv) | (i) | (ii) | (iii) |
| (3) | (iii) | (ii) | (i) | (iv) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

**109.** கிளைகோசைடிக் பிணைப்பு மற்றும் பெப்டைடு பிணைப்பு ஆகியவற்றை அவற்றின் அமைப்பில் முறையே கொண்ட பொருட்களை கண்டறிக.

(1) இனுலின், இன்சுலின்

(2) கைடின், கொலஸ்ட்ரால்

(3) கிளிசரால், ட்ரிப்சின்

(4) செல்லுலோஸ், லெசித்தின்

**110.** முழுவதும் பால் வினை நோய்கள் அடங்கியது எது ?

(1) புற்றுநோய், எய்ட்ஸ், சிஃபிலிஸ்

(2) கொனோரியா, சிஃபிலிஸ், ஜெனிட்டல் ஹெர்பிஸ்

(3) கொனோரியா, மலேரியா, ஜெனிட்டல் ஹெர்பிஸ்

(4) எய்ட்ஸ், மலேரியா, ஃபைலேரியா

**111.** படியெடுத்தலில் டி.என்.ஏ. ஹெலிக்சை திறக்க உதவும் நொதி எது ?

(1) ஆர்.என்.ஏ. பாலிமரேஸ்

(2) டி.என்.ஏ. லைகேஸ்

(3) டி.என்.ஏ. ஹெலிக்கேஸ்

(4) டி.என்.ஏ. பாலிமரேஸ்

**112.** கீழ்கண்டவற்றுள் விராய்டுகள் குறித்த **சரியானது** எது ?

(1) அவை புரத உறையற்று தனித்த DNA கொண்டுள்ளவை

(2) அவை புரத உறையுடன் RNA கொண்டுள்ளவை

(3) அவை புரத உறையற்று தனித்த RNA கொண்டுள்ளவை

(4) அவை புரத உறையுடன் DNA கொண்டுள்ளவை

**113.** கீழ்கணட்வற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வினையூக்கசெயல் பாடுகளை தடுப்பவை | (i) | ரிசின் |
| (b) | பெப்டைடுபிணைப் புகளைக் கொண்டவை | (ii) | மெலோ-னேட் |
| (c) | பூஞ்சைகளில் செல்-சுவர் பொருள் | (iii) | கைட்டின் |
| (d) | இரண்டாம் நிலை வளர்சிதைப்பொருட்கள் | (iv) | கொல்-லோஜென் |

கீழ்கண்டவற்றிலிருந்து **சரியான** விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

find my college



**114.** எந்த தொழில் நுட்பத்தில் கருவுற இயலாத பெண்களுக்கு மகப்பேறுக்காக கரு மாற்றம் செய்யப்படுகிறது ?

(1) GIFT மற்றும் ICSI

(2) ZIFT மற்றும் IUT

(3) GIFT மற்றும் ZIFT

(4) ICSI மற்றும் ZIFT

**115.** சில பகுப்புறும் செல்கள் செல் சுழற்சியில் இருந்து விடுபட்டு செயலற்ற வளர்வடக்க நிலைக்கு செல்கின்றன. இதற்கு அமைதி நிலை ($G_0$) என அழைக்கப்படுகிறது. இந்நிகழ்வு எதன் முழுவில் நடைபெறும் ?

(1) $G_2$ நிலை

(2) M நிலை

(3) $G_1$ நிலை

(4) S நிலை

**116.** உயிரியுடன் அது தொடர்பான உயிர்நுட்பத்தில் அதன் பயனைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | *பாசில்லஸ் துரின்ஜியன்சிஸ்* | (i) | குளோனிங் கடத்தி |
| (b) | *தெர்மஸ் அக்குவாடிகஸ்* | (ii) | முதல் rDNA மூலக்கூறை உருவாக்குதல் |
| (c) | *அக்ரோபாக்டீரியம் டுமிபேசியன்ஸ்* | (iii) | DNA பாலிமரேஸ் |
| (d) | *சால்மோனெல்லா டைபிமூரியம்* | (iv) | Cry புரதங்கள் |

**சரியான** விடையை கீழ்கண்டவற்றிலிருந்து தேர்வு செய்யவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iii) | (ii) | (iv) | (i) |

**117.** ஸ்ட்ரோபைலஸ்கள் அல்லது கூம்புகள் இவற்றில் காணப்படுகின்றன :

(1) *ஈக்குவிசிட்டம்*

(2) *சால்வீனியா*

(3) *டெரிஸ்*

(4) *மார்கான்ஷியா*

**118.** இன்டர்ஃபேஸ் நிலையின் $G_1$ நிலை குறித்த **சரியான** கூற்று எது ?

(1) உட்கரு பிரிவு நடை பெறுகிறது

(2) டி.என்.ஏ. உருவாக்கம் மற்றும் இரட்டிப் பாதல் நடைபெறுகிறது

(3) செல் உள்ளுறுப்புகள் அனைத்தும் மறு ஒருங்கமைதல் அடைகிறது

(4) செல்லில் வளர்சிதை மாற்ற செயல்கள் நடைபெற்று, செல் வளர்கிறது; ஆனால் டி.என்.ஏ. இரட்டிப்படையாது

**119.** படிபெயர்த்தலின் முதல் நிலையாவது :

(1) எதிர் குறியீடினை கண்டறிதல்

(2) ரைபோசோம் mRNA உடன் இணைதல்

(3) DNA மூலக்கூறை கண்டறிதல்

(4) tRNA -வின் அமைனோ அசைல் சேர்த்தல்

**120.** கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | தொகுதி - I | | தொகுதி - II |
|---|---|---|---|
| (a) | கூட்டமாக வாழும், அனைத்துண்ணும் தீங்குயிரி | (i) | *ஆஸ்டெரியாஸ்* |
| (b) | நிறையுயிரி அரசமச்சீர் கொண்டவை இளவுயிரி இருபக்க சமச்சீர் கொண்டவை | (ii) | தேள் |
| (c) | புத்தக நுரை யீரல் | (iii) | *டீனோபிளானா* |
| (d) | உயிர் ஒளி | (iv) | *லோகஸ்டா* |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iii) | (iv) |
| (2) | (i) | (iii) | (ii) | (iv) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |

**121.** என்டிரோகைனேஸ் என்ற நொதி எதன் மாற்றத்திற்கு உதவுகிறது ?

(1) பெப்சினோஜன் → பெப்சின்

(2) புரதம் → பாலிப்பெப்டைடு

(3) டிரிப்சினோஜன் → டிரிப்சின்

(4) கெசினோஜன் → கெசீன்

find my college



**122.** நிகோடின், ஸ்ட்ரிக்னைன், மற்றும் கேஃபைன் போன்ற இரண்டாம் நிலை வளர்சிதைப் பொருட்கள் தாவரங்களால் இதற்காக உற்பத்தி செய்யப் படுகின்றன :

(1) இனப்பெருக்கத்தின் மீதுள்ள செயற்பாடு
(2) ஊட்டச் சத்துக் குறிய திறன்
(3) வளர்ச்சி பிரதிபலிப்பு
(4) பாதுகாப்புச் செயல்

**123.** கொடுக்கப்பட்ட நோய்கள் மற்றும் நோய்க் காரணிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி – I** | | **தொகுதி – II** |
|---|---|---|---|
| (a) | டைஃபாய்டு | (i) | *ஊசெரிரியா* |
| (b) | நிமோனியா | (ii) | *பிளாஸ்மோடியம்* |
| (c) | பைலாரியா | (iii) | *சால்மோனெல்லா* |
| (d) | மலேரியா | (iv) | *ஹீமோஃபில்லஸ்* |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (i) | (iii) | (ii) | (iv) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |

**124.** கதிர் சிறுமலர்களில் காணப்படுகிறது :

(1) அரைகீழ்மட்ட சூலகப்பை
(2) கீழ்மட்ட சூலகப்பை
(3) மேல்மட்ட சூலகப்பை
(4) ஹைப்போகைனஸ் சூலகப்பை

**125.** ஒரு இயல்பு ECG -யில் QRS கூட்டமைப்பு எதனைக்குறிக்கின்றது ?

(1) வெண்டிரிக்கிளின் மின்முனைப்பியக்க மீட்சி
(2) ஆரிக்கிளின் மின்முனைப்பியக்க மீட்சி
(3) ஆரிக்கிளின் மின்முனைப்பியக்க நீக்கம்
(4) வெண்டிரிக்கிளின் மின்முனைப்பியக்க நீக்கம்

**126.** கரும்புப் பயிரின் மீது தெளிக்கும் போது தண்டின் நீளத்தை அதிகரித்து கரும்பின் விளைச்சலை அதிகரிக்கும் தாவர வளர்ச்சி ஊக்கியின் பெயரைக் குறிப்பிடுக.

(1) அப்சிசிக் அமிலம்
(2) சைட்டோகைனின்
(3) ஜிப்ரல்லின்
(4) எத்திலீன்

**127.** மனிதர்கள் செயல்பாட்டால் ஏற்பட்ட மாற்றங்கள் கீழ்கண்ட எவற்றில் பரிணாமமடைந்தன ?

(a) காலபகோஸ் தீவில் உள்ள டார்வின் சிட்டுக் குருவிகள்
(b) களைச் செடிகளில் களைகொல்லி எதிர்ப்பு
(c) யூகேரியோட்டுகளில் மருந்துப்-பொருளுக்கு எதிர்ப்பு
(d) மனிதன் உருவாக்கிய நாய்கள் போன்ற வீட்டு விலங்கின வகைகள்

(1) (d) மட்டும்
(2) (a) மட்டும்
(3) (a) மற்றும் (c)
(4) (b), (c) மற்றும் (d)

**128.** பரிணாமம் குறித்த கருவியல் சான்றினை தவறென நிரூபித்தவர் :

(1) ஒபாரின்
(2) கார்ல் எர்ன்ஸ்ட் வான் பேர்
(3) ஆல்பிரட் வாலஸ்
(4) சார்லஸ் டார்வின்

**129.** கீழ்கண்ட இணைகளில் ஒருசெல் அல்காக்களின் இணை எது ?

(1) *குளோரெல்லா* மற்றும் *ஸ்பைரூலினா*
(2) *லாமினேரியா* மற்றும் *சர்காசம்*
(3) *ஜெலிடியம்* மற்றும் *கிராசிலேரியா*
(4) *அனபீனா* மற்றும *வால்வாக்ஸ்*

**130.** கீழ்கண்ட கூற்றுகளில் உள்ளடக்கப் பொருட்கள் குறித்த எது **சரியானதல்ல** ?

(1) அவை சைட்டோபிளாசத்தில் இருப்புப் பொருளாக உள்ளவை.
(2) எந்த சவ்வாலும் சூழப்படவில்லை.
(3) உணவுத் துகள்களின் உள் விழுங்குதலில் ஈடுபடுகின்றன.
(4) சைட்டோபிளாசத்தில் தனித்து உள்ளவை.

**131.** நீர்த்த சிறுநீர் உருவாதலை தடுக்கும் காரணி எது ?

(1) JG செல்கள் ரெனின் சுரத்தலை குறைக்கிறது
(2) குறைவான ADH சுரக்கப்படுவதால் அதிக நீர் மீள உறிஞ்சப்படல்
(3) ஆல்டோஸ்டிரோன் விளைவால் சிறு நீர் குழல்களில் $Na^+$ மற்றும் நீர் மீள உறிஞ்சப்படுதல்
(4) ஏட்ரியல் நாட்ரியூரட்டிக் காரணி இரத்த நாள சுருக்கியாக செயல்படுகிறது

find my college



132. **சரியாக** பொருந்தியுள்ளது எது ?

| | | | |
|---|---|---|---|
| (1) | தலாசீமியா | – | X பிணைப்பு |
| (2) | ஹீமோஃபீலியா | – | Y பிணைப்பு |
| (3) | ஃபீனையில் கீட்டோனுரியா | – | உடல் குரோமோசோமில் உள்ள ஒடுங்கிய பண்பு |
| (4) | அரிவாள் இரத்தச் சோகை | – | உடல் குரோமோசோமில் உள்ள ஒடுங்கிய பண்பு, குரோமோசோம்-11 |

133. ஒரு சூழ்நிலை மண்டலத்தின் மொத்த முதல் நிலை உற்பத்தித் திறன் மற்றும் நிகர முதல் நிலை உற்பத்தித் திறன் ஆகியவை தொடர்புடைய கீழ்கண்ட கூற்றுகளில் **சரியானது** எது ?

(1) மொத்த முதல் நிலை உற்பத்தித்திறன் மற்றும் நிகர முதல் நிலை உற்பத்தித்திறன் ஆகியவற்றின் இடையே எந்தத் தொடர்பும் இல்லை.

(2) நிகர முதல்நிலை உற்பத்தித்திறனை விட, மொத்த முதல்நிலை உற்பத்தித்திறன் எப்போதும் குறைவாக உள்ளது.

(3) மொத்த முதல்நிலை உற்பத்தித்திறன் எப்போதும் நிகர முதல்நிலை உற்பத்தித் திறனை விட அதிகமாக உள்ளது.

(4) மொத்த முதல்நிலை உற்பத்தித்திறன் மற்றும் நிகர முதல்நிலை உற்பத்தித்திறன் ஆகியவை ஒன்றேயாகும்.

134. ஆக்சிஜன் கடத்தல் குறித்த **தவறான** கூற்று எது ?

(1) நுண்ணறையில் குறை $pCO_2$ அக்சி ஹீமோகுளோபின் உருவாதலுக்கு உதவிகிறது.

(2) ஆக்சிஜன் ஹீமோகுளோபினோடு இணைவது ஆக்சிஜனின் பகுதி அழுத்தத் தோடு தொடர்புடையது.

(3) கார்பன் டை ஆக்சைடின் பகுதி அழுத்தம் ஆக்சிஜன் ஹீமோகுளோபினோடு இணைதலில் தலையிடும்.

(4) நுண்ணறையில் உயர் $H^+$ அடர்வு ஆக்சி ஹீமோகுளோபின் உருவாதலுக்கு உதவுகிறது.

135. *பிளாஸ்மோடியத்தின்* தொற்று ஏற்படுத்தும் எந்த நிலை மனித உடலினுள் நுழைகிறது ?

(1) ஆண் காமிட்டோசைட்டுகள்

(2) டுரோஃபோசைட்டுகள்

(3) ஸ்போரோசைட்டுகள்

(4) பெண் காமிட்டோசைட்டுகள்

136. சிறுநீரில் கீழ்கண்ட எந்த பொருள் காணப்பட்டால், டயாபிட்டிஸ் மெல்லிட்டஸிற்கு அறிகுறியாகும் ?

(1) சிறுநீர் கற்கள் மற்றும் உயர் கிளைகோசூரியா

(2) யுரேமியா மற்றும் கீட்டோனுரியா

(3) யுரேமியா மற்றும் சிறுநீர் கற்கள்

(4) கீட்டோனுரியா மற்றும் கிளைகோசூரியா

137. ஒளி வினையின் போது எலெக்ட்ரான்கள் இவற்றிலிருந்து கடத்தப்படுவதை பிளாஸ்டோகுயினோன் துணை புரிகிறது :

(1) PS-I -லிருந்து ATP சிந்தேஸ்

(2) PS-II -விலிருந்து $Cytb_6f$ கூட்டமைப்பு

(3) $Cytb_6f$ கூட்டமைப்பிலிருந்து PS-I

(4) PS-I -லிருந்து $NADP^+$

138. கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி - I** | | **தொகுதி - II** |
|---|---|---|---|
| (a) | 6 - 15 இணைகள் செவுள் பிளவுகள் | (i) | *டிரைகான்* |
| (b) | ஹெட்டிரோசெர்கஸ் வால் துடுப்பு | (ii) | வட்ட வாய்கள் |
| (c) | காற்று பை | (iii) | காண்டிரிக்தீஸ் |
| (d) | நச்சு கொடுக்கு | (iv) | ஆஸ்டீக்தீஸ் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (i) | (iv) | (iii) | (ii) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (iv) | (ii) | (iii) | (i) |

139. பெண்குவின் மற்றும் டால்ஃபினின், ஃபிளிப்பர்கள். இதற்கு எடுத்துக்காட்டு :

(1) இயற்கைத் தேர்வு

(2) தழுவிப்பரவல்

(3) குவி பரிணாமம்

(4) தொழிற்சாலை மெலானின் ஆக்கம்

find my college



**140.** அண்டார்டிகா பகுதியில் பனிக்–குருடு ஏற்படுவது எதனால் ?

(1) அகச்சிவப்பு கதிர்களால் விழித்திரை பாதிக்கப் படுவதால்

(2) குறைந்த வெப்ப நிலையில் கண்ணில் உள்ள திரவங்கள் உறைவதால்

(3) அதிக அளவிலான UV-B கதிர்வீச்சின் காரணமாக கருவிழி வீக்கமடைவதால்

(4) பனிக்கட்டியிலிருந்து ஒளி அதிக அளவில் பிரதிபலிக்கப் படுவதால்

**141.** அரை கீழ்மட்ட சூலகப்பை இதில் உள்ளது :

(1) பிளம்

(2) கத்தரி

(3) கடுகு

(4) சூரியகாந்தி

**142.** வளர்ச்சி நிலை அதிகமாக இருப்பது எப்போது ?

(1) உறக்க நிலை

(2) அடுக்கேற்றப் பருவம்

(3) ஒடுக்கப் பருவம்

(4) முதிர்ந்து உதிர்தல்

**143.** கீழ்கண்டவற்றுள் விதை உறக்கத்தை தடை செய்யும் பொருள் **எதுவல்ல** ?

(1) பாரா – அஸ்கார்பிக் அமிலம்

(2) ஜிப்ரல்லிக் அமிலம்

(3) அப்சிசிக் அமிலம்

(4) பினாலிக் அமிலம்

**144.** ஒளிசுவாசத்தில் RuBisCo நொதியின் ஆக்ஸி-ஜனேற்ற நிகழ்வால் தோன்றுவது :

(1) 1 மூலக்கூறு 4-கார்பன் பொருள்
1 மூலக்கூறு 2-கார்பன் பொருள்

(2) 2 மூலக்கூறுகள் 3-கார்பன் பொருள்

(3) 1 மூலக்கூறு 3-கார்பன் பொருள்

(4) 1 மூலக்கூறு 6-கார்பன் பொருள்

**145.** கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி – I** | | **தொகுதி – II** |
|---|---|---|---|
| (a) | *கிளாஸ்டிரீடியம் பூட்டிலிக்கம்* | (i) | சைக்ளோஸ் போரின் –A |
| (b) | *டிரைக்கோடெர்மா பாலிஸ்போரம்* | (ii) | பியூட்ரிக் அமிலம் |
| (c) | *மோனாஸ்கஸ் பர்பூரியஸ்* | (iii) | சிட்ரிக் அமிலம் |
| (d) | *ஆஸ்பர்ஜில்லஸ் நைகர்* | (iv) | இரத்த கொலஸ்டிரால் குறைக்கும் காரணி |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (i) | (ii) | (iv) | (iii) |

**146.** ஆகாயத் தாமரை மற்றும் நீர் அல்லி ஆகியவற்றில் மகரந்தச் சேர்க்கை இவற்றின் மூலம் நடைபெறுகிறது.

(1) பூச்சிகள் மற்றும் நீர்

(2) பூச்சிகள் அல்லது காற்று

(3) நீர் ஓட்டங்கள் மட்டும்

(4) காற்று மற்றும் நீர்

**147.** ராபர்ட் மே -இன் கருத்தின்படி புவியின் சிற்றினப் பன்மயம் சுமார் :

(1) 7 மில்லியன்

(2) 1.5 மில்லியன்

(3) 20 மில்லியன்

(4) 50 மில்லியன்

**148.** வறையறு நொதிகள் குறித்து **தவறான** கூற்று எது?

(1) ஒட்டும் முனைகள் டி.என்.ஏ. லைகேஸ் மூலம் இணைக்கப்படுகிறது.

(2) ஒவ்வொரு வறையறு நொதியும் டி.என்.ஏ. -வின் முழு நீளத்தை ஆராய்கிறது.

(3) பாலின்ட்ரோமிக் பகுதிகளில் டி.என்.ஏ. இழைகளை அவை வெட்டுகிறது.

(4) மரபு பொறியியலில் அவை பயன் படுகிறது.

find my college



**149.** கூழ்ம மின் ஆற்றலால் பகுப்பின் மூலம் பிரித்தெடுக்கப்பட்ட DNA துண்டங்களை இதன் உதவியுடன் பார்க்க முடியும் :

(1) அகச் சிவப்புக் கதிர்வீச்சில் எத்திடியம் புரோமைடு

(2) பிரகாசமான நீல ஒளியில் அசிடோ-கார்மைன்

(3) UV கதிர்வீச்சில் எத்திடியம் புரோமைடு

(4) UV கதிர்வீச்சில் அசிடோகார்மைன்

**150.** ஹிசார்டேல் என்ற புதிய வகை செம்மறி ஆடு பிக்கானரி ஈவுகள் மற்றும் மரினோ ராம்களை எவ்வகை கலப்பு மேற்கொண்டு உருவாக்கப் பட்டது ?

(1) உள் கலப்பு

(2) வெளி கலப்பு

(3) திடீர் மாற்ற கலப்பு

(4) குறுக்கு கலப்பு

**151.** உடற்குழியற்ற மற்றும் இருபக்க சமச்சீர் கொண்ட விலங்குகளின் தொகுதி எது ?

(1) அன்னலிடா

(2) டீனோஃபோரா

(3) தட்டை புழுக்கள்

(4) அஸ்கெல்மிந்தஸ்

**152.** இரண்டு கார இணைகளுக்கிடையில் உள்ள தூரம் 0.34 nm மற்றும் இயல்பு பாலூட்ட செல்லின் மொத்த கார இணைகள் $6.6 \times 10^9$ bp எனில், டி.என்.ஏ. -வின் நீளம் தோராயமாக எது ?

(1) 2.7 மீட்டர்கள்

(2) 2.0 மீட்டர்கள்

(3) 2.5 மீட்டர்கள்

(4) 2.2 மீட்டர்கள்

**153.** பாரம்பரியத்திற்கான குரோமோசோம் கோட்பாட்டின் சோதனை சரிபார்ப்பு இவரால் நடத்தப் பட்டது :

(1) மார்கான்

(2) மெண்டல்

(3) சட்டன்

(4) பொவேரி

**154.** கீழ்கண்டவற்றிலிருந்து **சரியான** இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) எக்ஸோநியூக்ளியேஸ்கள் - DNA -வில் குறிப்பிட்ட இடங்களில் வெட்டுகின்றன

(2) லைகேஸ்கள் - இரு DNA மூலக்கூறுகளை இணைக்கின்றன

(3) பாலிமெரேஸ்கள் - DNA -வை துண்டங்களாக உடைக்கின்றன

(4) நியூகிளியேஸ்கள்-DNA -ன்இரு இழைகளைப் பிரிக்கின்றன

**155.** நோய் தடைக்காப்பு குறித்த **தவறான** கூற்று எது ?

(1) வளர் கரு தாயிடமிருந்து ஆன்டிபாடிகளை பெற்றுக் கொள்ளும். இது மந்தமான நோய்தடைக்காப்புக்கு எடுத்துக் காட்டு.

(2) உயிர் அல்லது செயலிழந்த ஆன்டிஜென்கள் ஓம்புயிரியில் செலுத்தப் பட்டால் அவை ஆன்டிபாடிகளை உருவாக்கும். இது ஆற்றல் மிகு நோய் தடைகாப்பாகும்.

(3) ஆன்டிபாடிகளை நேரடியாக செலுத்துதல் மந்தமான நோய் தடைகாப்பாகும்.

(4) ஆற்றல் மிகு நோய் தடைகாப்பு உடனடியாகவும் முழு துலங்கலை கொடுக்கும்.

**156.** உட்சுவாசம் நிகழ்வுகளில் **சரியானவை** எவை ?

(a) உதிர விதானம் சுருங்கல்

(b) வெளி விலா எலும்பிடைத்தசைகள் சுருங்குதல்

(c) நுரையீரல் கொள்ளளவு குறைதல்

(d) நுரையீரலிடை அழுத்தம் அதிகரித்தல்

(1) (d) மட்டும்

(2) (a) மற்றும் (b)

(3) (c) மற்றும் (d)

(4) (a), (b) மற்றும் (d)

**157.** கீழ்கண்டவற்றுள் **தவறான** கூற்று எது ?

(1) மரபு பொறியியல் மூலம் *ஈ-கோலையில்* இன்சுலின் உருவாக்கப்படுகிறது

(2) மனிதனில் இன்சுலின் ஒரு முன்-இன்சுலினாக உருவாக்கப்படுகிறது

(3) முன் இன்சுலினில் ஒரு கூடுதல் பெப்டைடு, C- பெப்டைடு உள்ளது

(4) செயல்படு இன்சுனில், A மற்றும் B சங்கிலி ஹைட்ரஜன் பிணைப்புகளால் இணைந்திருக்கும்

find my college



**158.** புல் சூழ்நிலை மண்டலத்தில் உணவூட்ட நிலைகளுடன் **சரியான** சிற்றின உதாரணங்களைப் பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | நான்காம் உணவூட்ட நிலை | (i) | காகம் |
| (b) | இரண்டாம் உணவூட்ட நிலை | (ii) | கழுகு |
| (c) | முதலாம் உணவூட்ட நிலை | (iii) | முயல் |
| (d) | மூன்றாம் உணவூட்ட நிலை | (iv) | புல் |

**சரியான** விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iii) | (iv) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (iii) | (ii) | (i) | (iv) |
| (4) | (iv) | (iii) | (ii) | (i) |

**159.** கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி - I** | | **தொகுதி - II** |
|---|---|---|---|
| (a) | பிட்யூட்டரி சுரப்பி | (i) | கிரேவிஸ் நோய் |
| (b) | தைராய்டு சுரப்பி | (ii) | டையாபிட்டிஸ் மெல்லிட்டஸ் |
| (c) | அட்ரீனல் சுரப்பி | (iii) | டையாபிட்டிஸ் இன்சிபிடஸ் |
| (d) | கணையம் | (iv) | அட்டிசன் நோய் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iv) | (iii) | (i) | (ii) |
| (3) | (iii) | (ii) | (i) | (iv) |
| (4) | (iii) | (i) | (iv) | (ii) |

**160.** கரப்பான் பூச்சியின் தலையை நீக்கினால், அது சிறிது காலம் வாழும். எதனால் ?

(1) தலையில் 1/3 நரம்பு மண்டலம் உள்ளது. மீதமுள்ளவை உடலின் முதுகு புறத்தில் உள்ளது

(2) கரப்பான் பூச்சியின் உணவு பாதை மேல் நரம்பணுத்திறள் வயிற்றின் கீழ் பகுதியில் அமைந்துள்ளது

(3) கரப்பான் பூச்சியில் நரம்பு மண்டலம் காணப்படாது

(4) தலையில் நரம்பு மண்டலத்தின் ஒரு சிறு பகுதி மட்டுமுள்ளது. மீதமுள்ளவை உடலின் வயிற்றுப் பகுதியில் உள்ளது

**161.** கொடுக்கப்பட்ட தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி - I** | | **தொகுதி - II** |
|---|---|---|---|
| (a) | பிளாசன்டா | (i) | ஆன்டிரஜன் |
| (b) | சோனா பெல்லுசிடா | (ii) | மனித கோரியானிக் கொனடோ-டுரோபின் |
| (c) | பல்போ யுரேத்திரல் சுரப்பிகள் | (iii) | அண்டத்தின் அடுக்கு |
| (d) | லெடிக் செல்கள் | (iv) | பீனிஸை வழவழப்-பாக்குதல் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (iv) | (iii) | (i) | (ii) |
| (3) | (i) | (iv) | (ii) | (iii) |
| (4) | (iii) | (ii) | (iv) | (i) |

**162.** ABO இரத்த வகையை கட்டுப்படுத்தும் 'I' ஜீன் குறித்த **தவறான** கூற்று எது ?

(1) 'i' அலீல் எந்த சர்க்கரையையும் உருவாக்குவதில்லை.

(2) ஜீன் 'I' மூன்று அலீல்கள் கொண்டுள்ளது.

(3) ஒரு நபரிடத்தில் மூன்றில் இரண்டு அலீல்கள் மட்டும் காணப்படும்.

(4) '$I^A$' மற்றும் '$I^B$' இரண்டும் இருந்தால், ஒரே வகையான சர்க்கரையை வெளிபடுத்துகிறது.

**163.** கீழ்கண்ட கூற்றுகளில் எது **சரியானது** ?

(1) அடினைன் தைமைனுடன் இணைவதில்லை.

(2) அடினைன் இரு H-பிணைப்புகள் மூலம் தைமைன் உடன் இணைந்துள்ளது.

(3) அடினைன் ஒரு H-பிணைப்பின் மூலம் தைமைன் உடன் இணைந்துள்ளது.

(4) அடினைன் மூன்று H-பிணைப்புகளின் மூலம் தைமைன் உடன் இணைந்துள்ளது.

**164.** மெய்யுட்கரு செல்களில் கிளைகோ புரதங்கள் மற்றும் கிளைகோலிபிடுகள் உருவாகும் முக்கியமான இடம் எது ?

(1) பாலிசோம்கள்

(2) எண்டோபிளாச வலை

(3) பெராக்சிசோம்கள்

(4) கோல்கை உடலங்கள்

find my college



**165.** விலங்குகளில் அதிக அளவு காணப்படும் புரதம் எது ?
(1) இன்சுலின்
(2) ஹீமோகுளோபின்
(3) கொல்லாஜன்
(4) லெக்டின்

**166.** தாவரத்தின் பாகங்கள், ஒன்றின் உள் மற்றொன்று என இரு தலைமுறைகளைக் கொண்டுள்ளது :
(a) மகரந்தப்பையின் உள்ளே மகரந்தத் துகள்கள்
(b) இரண்டு ஆண் கேமீட்டுகள் உடைய முளைத்த மகரந்தத் துகள்கள்
(c) கனியின் உள்ளே விதை
(d) சூலின் உள்ளே சூலிப்பை
(1) (a) மற்றும் (d)
(2) (a) மட்டும்
(3) (a), (b) மற்றும் (c)
(4) (c) மற்றும் (d)

**167.** இரண்டாம் நிலை அண்ட செல்லில் குன்றல் பகுப்பு எந்த நிலையில் நிறைவடைகிறது ?
(1) விந்தணு மற்றும் அண்ட செல் இணையும் நேரத்தில்
(2) அண்ட வெளியாதலுக்கு முன்
(3) புணர்ச்சி நடை பெறும் நேரத்தில்
(4) கரு உருவான பிறகு

**168.** ஒரு தாவரப் பகுதியின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் கீழ்கண்ட உள்ளமைப்பு பண்புகள் காண்பப்படுகின்றன :
(a) கற்றை உறையால் சூழப்பட்ட அதிக எண்ணிக்கையிலான வாஸ்குலார் கற்றைகள் சிதறிக் காணப்படும்.
(b) பெரிய அளவிலான, தெறிவான பாரன் கைமாவாலான தளத் திசு.
(c) வாஸ்குலார் கற்றைகள் ஒருங்கமைந்தவை மற்றும் மூடியவை.
(d) புளோயம் பாரன்கைமா காண்ப்பட-வில்லை.
தாவரத்தின் வகையினையும் அதன் பகுதியை-யும் கண்டறிக.
(1) இருவித்திலைத்தாவர வேர்
(2) ஒருவித்திலைத்தாவரத் தண்டு
(3) ஒருவித்திலைத்தாவர வேர்
(4) இருவித்திலைத்தாவரத் தண்டு

**169.** உணவு பாதையிலுள்ள கோப்பை வடிவ செல்கள் எவற்றிலிருந்து மாறியிருக்கிறது ?
(1) கூட்டு எபிதீலிய செல்கள்
(2) கட்டை வடிவ எபிதீலிய செல்கள்
(3) தூண்வடிவ எபிதீலிய செல்கள்
(4) காண்ட்ரோ சைட்டு

**170.** கடத்தியில் இணைக்கப்பட்ட DNA -வின் படி எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் தொடர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன :
(1) உணர்தல் தளம்
(2) தெரிவுசெய்யக்கூடிய குறியீடு
(3) Ori தளம்
(4) பாலின்ட்ரோம் தொடர்

**171.** கொடுக்கப்பட்டுள்ள தொகுதிகளை பொருத்தி **சரியான** விடையை தேர்ந்தெடு.

| | **தொகுதி - I** | | **தொகுதி - II** |
|---|---|---|---|
| (a) | கார்டை உறுப்பு | (i) | நடு காது பகுதியை தொண்டை-யோடு இணைக்கிறது |
| (b) | காக்ளியா | (ii) | லாபிரிந்தின் சுருண்ட பகுதி |
| (c) | யூஸ்டெசியன் குழல் | (iii) | நீள்வட்ட பலகணியோடு இணைந்துள்ளது |
| (d) | ஸ்டேபிஸ் | (iv) | பேசில்லார் சவ்வில் அமைந்துள்ளது |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iii) | (i) | (iv) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iv) | (ii) | (i) | (iii) |

**172.** கொடுக்கப்பட்டவைகளுள் கார அமினோ அமிலம் எது ?
(1) வாலைன்
(2) தைரோசின்
(3) குளுட்டாமிக் அமிலம்
(4) லைசின்

find my college



**173.** குன்றல் பகுப்பு குறித்த கீழ்கண்டவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சைகோடீன் | (i) | முடிவடைதல் |
| (b) | பாக்கைடீன் | (ii) | கையாஸ்மாக்கள் |
| (c) | டிப்ளோடீன் | (iii) | குறுக்கெதிர் மாற்றம் |
| (d) | டையாகைனசிஸ் | (iv) | சினாப்சிஸ் |

கீழ்கணடவற்றிலிருந்து **சரியான** விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iv) | (iii) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (i) | (ii) | (iv) | (iii) |

**174.** S.L. மில்லர் தன் சோதனைகளில் மூடிய குடுவையில் இருந்து எவற்றைக் கலப்பதின் மூலம் அமினோஅமிலங்களைத் தோற்றுவித்தார் ?

(1) 600°C -ல் $CH_3$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி

(2) 800°C -ல் $CH_4$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி

(3) 800°C -ல் $CH_3$, $H_2$, $NH_4$ மற்றும் நீராவி

(4) 600°C -ல் $CH_4$, $H_2$, $NH_3$ மற்றும் நீராவி

**175.** **சரியான** கூற்றை தேர்ந்தெடு.

(1) இன்சுலின் உயர் கிளைசீமியாவோடு தொடர்புடையது.

(2) குளுக்கோகார்டிகாய்டுகள் குளுக்கோ நியோ ஜெனிசிஸ்ஸை தூண்டுகிறது.

(3) குளுக்ககான் ஹைப்போ கிளைசீமியா வோடு தொடர்புடையது.

(4) இன்சுலின் கணைய செல்கள் மற்றும் அடிப்போசைட்டுகளுடன் செயல் படுகிறது.

**176.** எதனைக் கட்டுப்படுத்த 1987-ல் மான்ட்ரியல் பிரகடனம் கையொப்பமிடப்பட்டது ?

(1) மின்னணு கழிவுகளை அகற்றுதல்

(2) மரபு மாற்றப்பட்ட உயிரினங்களை ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு கொண்டு செல்லுதல்

(3) ஓசோனை அழிக்கும் பொருட்களின் வெளியீடு

(4) பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடு

**177.** புருஸ் விளிம்பு நுண் வில்லைகளை கொண்ட கன சதுர வடிவ எபிதீலியம் எங்கு காணப் படும் ?

(1) யூஸ்டேஷியன் குழாய்

(2) குடலின் உட்படலம்

(3) உமிழ் நீர் சுரப்பியின் நாளங்கள்

(4) நெஃப்ரானின் அன்மை சுருள் நுண்குழல்-கள்

**178.** *பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ்ஸின்* நச்சு ஜீனை உட்செலுத்தி உருவாக்கப்பட்ட Bt பஞ்சு வகை எதற்கு எதிர்ப்பு ?

(1) பூச்சி கொன்று தின்னிகள்

(2) பூச்சி தீங்குயிரிகள்

(3) பூஞ்சை நோய்கள்

(4) தாவர நெமட்டோடுகள்

**179.** கிராஃபியன் ஃபாலிக்கிளிலிருந்து அண்ட செல் வெளியாதலுக்கு ஹார்மோனின் எந்த நிலை உதவுகிறது ?

(1) FSH – இன் குறை அடர்வு

(2) ஈஸ்டிரஜனின் உயர் அடர்வு

(3) புரோஜெஸ்டிரானின் உயர் அடர்வு

(4) LH – இன் குறை அடர்வு

**180.** **சரியற்ற** கூற்றை கண்டறிக.

(1) வைரக் கட்டையானது டானின்கள், ரெசின்கள், எண்ணெய்கள் மற்றும் பல படிவதால் அடர்ந்த நிறத்தில் உள்ளது.

(2) வைரக் கட்டை நீரைக் கடத்துவதில்லை ஆனால் உறுதித் தன்மையை அளிக்கிறது.

(3) சாற்றுக் கட்டை நீர் மற்றும் தனிமங்களை வேரிலிருந்து இலைக்கு கடத்துவதில் பங்கேற்கிறது.

(4) சாற்றுக் கட்டையானது இரண்டாம் நிலை சைலத்தின் உட்பகுதி மற்றும் அது வெளிர் நிறத்தில் காணப்படும்.

- o 0 o -

find my college



Space For Rough Work / இதர வேலைக்கான காலியிடம்

find my college